(ஆ) தஞ்சையில் அரிசித் தட்டுப்பாடு

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முக்கியமான ஒரு பிரச்னை எழுந்திருப்பதால் உங்கள் கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு லீடர் ஆப் தி ஹவுஸ் இதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன். தஞ்சை டவுனில் நேற்று முழுவதும் ரைஸ் கிடைக்கவில்லை என்று பிரஸ்ஸிலே வந்திருக்கிறது.

'There is absolute non-availability of rice in Thanjavu'. ஏன் கலகம் வராது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வந்தவுடன் நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கலாம். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அது நன்றாகத் தெரியும்.

திரு. ரா. உமாநாத்: ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் அதற்கு அங்கேயிருந்து வர வேண்டும் என்றால் அதற்கு மூன்று நான்கு நாட்கள் ஆகிவிடும். பிறகு, what will happen? Rice must be rushed up to that place.

இம்மாதிரி விஷயத்தில் லீடர் ஆஃப் தி ஹவுஸ் ரஷ் செய்து இதற்கு ஏதாவது செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையிலே வந்த செய்தியைப் பார்த்து விட்டுச் சொல்கிறீர்கள் என்று கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: இல்லையில்லை, டிரங்கால் வந்தது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்கமே முழுக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருந்தது. இருந்தாலும் அங்கே சில்லரைக் கடைகளில் அரிசி கிடைப்பதிலே இருக்கின்ற சிரமத்தை உணர்ந்து, சில்லரை வியாபாரிகளை ஏற்கனவே அவர்கள் எவ்வளவு சில்லரை வியாபாரம் செய்தார்களோ அந்த அளவுக்கு அவர்கள் விவசாயிகளிடத்திலே நேரடியாகக் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்கின்ற உத்தரவை இப்போது பிறப்பித்திருக்கிறோம். (குறுக்கீடு) ஆணையிடச் சொல்லிவிட்டோம். அது பத்திரிகையிலேயும் வந்திருக்கின்றது. வெளிவருவதற்கு ஒரு நாள், இரண்டு நாள் ஆகலாம். ஆகவே அவர்களே நேரடியாகக் கொள்முதல் செய்து சில்லரைக் கடைகளிலே தஞ்சை மாவட்டத்திற்குள்ளாக விற்பதிலே தடையில்லை, விற்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அரசாங்கம் மற்றொரு பக்கத்திலே கொள்முதல் செய்தாலும், சில்லரை வியாபாரிகளும் கொள்முதல் செய்து விற்கலாம். இந்த இடர்பாடுகள் ஓரிரு நாட்களிலே நீங்கிவிடும் என்று நான் கருதுகிறேன். அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.